**செய்தி வெளியீடு எண்: 653** **நாள்:28.09.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

சென்னையின் முன்னாள் மேயர் என். சிவராஜ் அவர்களின் 128ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, தங்கசாலை, மணிக்கூண்டு அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(29.9.2019) காலை 10.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்த நாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், மேயர் என்.சிவராஜ் அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 29ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய தமிழ்நாட்டுத் தலைவர்களுள் மேயர் என்.சிவராஜ் அவர்கள் முதன்மையானவர் ஆவார். தற்போது ஆந்திராவிலும் அன்றைய சென்னை மாகாணத்திலும் இருந்த கடப்பா நகரில், தமிழ்க்குடும்பத்தில் 29.9.1892 அன்று நமச்சிவாயம் – வாசுதேவி இணையருக்கு மகனாக சிவராஜ் அவர்கள் பிறந்தார். இவரது தந்தையார் பௌத்த சமயத்தை தழுவியதால், புத்தரின் அன்பு நெறியை தனது வாழ்வியல் நெறியாகக் கடைபிடித்தார்.

சென்னை மாநிலக் கல்லூரியில் உயர்கல்வி பயின்று 1911ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். பின்னர், சென்னை சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்று 1915ஆம் ஆண்டு வழக்குரைஞரானார். அதனையடுத்து சென்னை சட்டக்கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

மேயர் என். சிவராஜ் அவர்கள் 1918ஆம் ஆண்டு மீனாம்பாள் அம்மையாரை மணந்தார். இருவரும் இணைந்து ஆதி திராவிட மகாஜன சபை, நீதிக்கட்சி, பெரியாரின் சுயமரியாதை இயக்கம் ஆகிய இயக்கங்களில் பணியாற்றி ஜாதி ஒழிப்பு, இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர். தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காக உழைத்த மேயர் என். சிவராஜ் அவர்கள், நீதிக்கட்சியின் சார்பில் சென்னை மாகாண சட்ட மேலவை உறுப்பினராக 1926 முதல் 1937ஆம் ஆண்டு வரை செயல்பட்டார்.

1942ஆம் ஆண்டு அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளத்தின் (ஹ.ஐ.ளு.ஊ.கு) முதல் தலைவராக மேயர் என். சிவராஜ் அவர்கள் இருந்தார். பின்னர், இவ்வமைப்பினைக் கலைத்துவிட்டு டாக்டர். அம்பேத்கர் அவர்கள் அகில இந்திய குடியரசுக் கட்சியை அமைத்தபோது, அக்கட்சியின் முதல் தலைவராக 1959ஆம் ஆண்டு என். சிவராஜ் அவர்கள் பொறுப்பேற்று தமது இறுதிக்காலம் வரை அப்பொறுப்பில் தொடர்ந்தார். 1957ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் செங்கல்பட்டு தொகுதியில் போட்டியிட்டு வென்று 1961ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராகப் பணியாற்றினார்.

சென்னை பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலை பல்கலைக்கழகம் ஆகியவற்றில் செனட் உறுப்பினராக இருந்த மேயர் என். சிவராஜ் அவர்கள், ‘ஆதிதிராவிட மக்கள் சட்டை அணியக்கூடாது, காலில் செருப்பு போடக்கூடாது’ என்பது போன்ற மனித உரிமைக்கு எதிரான செயல்களை எதிர்த்தார். இதனைக் கண்காணித்து நடவடிக்கை எடுத்திட தனி அலுவலரை நியமிக்க வேண்டும் என சட்டமன்றத்தில் முழங்கினார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காகப் பாடுபட்ட மேயர் என். சிவராஜ் அவர்கள் 29.9.1964 அன்று இயற்கை எய்தினார்.

சென்னையின் முன்னாள் மேயர் என். சிவராஜ் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், சென்னை, தங்கசாலை, மணிக்கூண்டு அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை (29.9.2019) மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**